செய்தி வெளியீடு எண். 91 நாள்: 11.02.2018

## தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொகுதி-IV-க்கான போட்டித் தேர்வுகள் மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்ட ஆய்வு

திருவள்ளூர் ஐ.வி.ஆர் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொகுதி-IV-க்கான போட்டித் தேர்வுகள் நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகள் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.02.2018) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த தொகுதி – IV-க்கான போட்டித் தேர்வுகள். மாவட்டத்தில் தேர்வு எழுத 66,878 விண்ணப்பித்து, 57080 நபர்கள் தேர்வு எழுதினார்கள். 9798 நபர்கள் தேர்வு எழுத வரவில்லை. 85 விழுக்காடு நபர்கள் தேர்வு எழுதினார்கள். 147 கல்லூரி, பாலிடெக்னிக் மற்றும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள 220 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன. இவர்களில் 146 பார்வை திறன் குறைபாடு உள்ளவர்கள் தேர்வெழுத உள்ளனர். தேர்வு மையங்களில் முறைகேடுகளை தவிர்க்கும் நோக்குடன் 156 வீடியோ குழுக்கள் மூலம் பதிவுகள் மேற்கொள்ளவும் இணைய வழி கண்காணிப்பு கேமராக்கள் மூலமாகவும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்வாளர்கள் கைப்பேசி உள்ளிட்ட எந்தவித மின்னணு பொருட்களையும் தேர்வு மையங்களில் உபயோகிக்கவோ, கேள்வித் தாளில் எழுதுவதற்கும் மற்றும் பிற குறியீடுகள் மேற்கொள்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இவ்ஆய்வுகளில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மா.நாராயணன் (பொ), சார்பு செயலாளர் திரு.தாமோதரன், வட்டாட்சியர்கள் திரு. தமிழ்செல்வன் (திருவள்ளூர்), திருமதி.ரமா (பூந்தமல்லி) மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**